**செ.வெ.எண்: 639** **நாள்: 29.10.2021**

**புதுக்கோட்டை மாவட்டத்தில்**

**நற்பெயர் பெற்ற தனியார் பள்ளிகளில் கல்வி பயில தேர்வு செய்யப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு சேர்க்கைக்கான ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

---

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்பட்டு வரும் நற்பெயர் பெற்ற தனியார் உண்டி, உறைவிடப்பள்ளிகளில் கல்வி பயிலும் வகையில் தேர்வு செய்யப்பட்ட மாணவ, மாணவியர்களுக்கு சேர்க்கைக்கான ஆணைகளை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் இன்று (29.10.2021) வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;

தமிழக அரசின் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ், செயல்படுத்தப்பட்டு வரும் நற்பெயர் பெற்ற தனியார் உண்டி உறைவிடப் பள்ளிகளில் கல்வி பயில செய்யும் திட்டத்துடன் 5 ஆம் வகுப்பில் திறனறிவுத் தேர்வில் தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்களுக்கு சிறந்த கல்வி வழங்க வேண்டும் என்ற நோக்கில் ஒரு வட்டாரத்திற்கு ஒரு மாணவ, மாணவியரை தேர்வு செய்து நற்பெயர் பெற்ற சிறந்த உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பில் சேர்க்கப்பட்டு தொடர்ந்து 12 ஆம் வகுப்பு வரை அவர்களின் படிப்பிற்கென ஆகும் செலவினை அரசு ஏற்கும் திட்டம் 2008-2009ஆம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன்படி, 2021-22ஆம் கல்வியாண்டிற்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில் அனைவருக்கும் கல்வி இயக்கம் மற்றும் வட்டார கல்வி மையம் மூலம் வட்டார வள மையம் மேற்பார்வையாளர் மேற்பார்வையில் அரசு பள்ளிகள், அரசு உதவிபெறும் பள்ளிகள், நகராட்சி பள்ளிகள் மற்றும் ஆதிதிராவிடர் பள்ளிகளில் 5ம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் கிறித்துவ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்களுக்கு மட்டும் தனித் தேர்வு நடத்தி அதில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியர் வட்டாரத்திற்கு ஒருவர் வீதம் தேர்வு செய்யப்பட்டனர்.

அந்த வகையில் தேர்வு செய்யப்பட்ட திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் ஸ்ரீநஜிதா.ஸ்ரீ, அரிமளம் ஊராட்சி ஒன்றியத்தில் க.திவ்யதர்ஷினி, குன்னன்டார்கோவில்

ஊராட்சி ஒன்றியத்தில் க.கீதாஞ்சலி, புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் சே.கனிஷ்கா, கறம்பக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் மு.கெலினா, விராலிமலை ஊராட்சி ஒன்றியத்தில் ம.யோகராணி, திருமயம் ஊராட்சி ஒன்றியத்தில் சு.ஹேமஸ்ரீ, அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தில் பழ.சதுர்சிகா, மணமேல்குடி ஊராட்சி ஒன்றியத்தில் ப.ஸ்ரீபதி, அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியத்தில் தி.ரோகித், ஆவுடையார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தில் வ.வர்ஷா, கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் மு.வனிஷா, பொன்னமராவதி ஊராட்சி ஒன்றியத்தில் க.தருணிகாஸ்ரீ ஆகிய மாணவ, மாணவியர்களுக்கு பள்ளியில் சேர்வதற்கான ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. பள்ளி மாணவ, மாணவிகள் இந்த வாய்ப்பை முறையாக பயன்படுத்தி சிறந்த முறையில் கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர் கருணாகரன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**